வெள்ளக்கோவிலில் ரூ.29 லட்சத்துக்கு கொப்பரை விற்பனை

வெள்ளக்கோவில், ஜூன் 2: வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.29 லட்சத்துக்கு கொப்பரை (தேங்காய்ப் பருப்பு) விற்பனை செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விளாத்திகுளம், ஆண்டிபட்டிகோட்டை, மார்க்கம்பட்டி, கீரனூர், பழையகோட்டை, மங்கலப்பட்டி உள்ளிட்ட இடங்களில் இருந்து 67 விவசாயிகள் 480 மூட்டைகளில் 24 டன் கொப்பரைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

காங்கயம், வெள்ளக்கோவில், சிவகிரி, முத்தூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 10 வணிகர்கள் இவற்றை வாங்குவதற்காக வந்திருந்தனர். கொப்பரை கிலோ ரூ.90.99 முதல் ரூ.133.33 வரை விற்பனையானது. சராசரி விலை ரூ.125.09. கடந்த வார சராசரி விலை ரூ.126.89.

ஒட்டுமொத்த விற்பனைத் தொகை ரூ.29 லட்சம் அந்தந்த விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் செலுத்தப்பட்டதாக, திருப்பூர் விற்பனைக்குழு முதுநிலை செயலாளர் எஸ்.சண்முகசுந்தரம் தெரிவித்தார். ஏல ஏற்பாடுகளை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகுடீஸ்வரன் செய்திருந்தார்.

திருப்பூர் பேருந்து நிலைய ஆக்கிரமிப்புகள் அகற்றம்

திருப்பூர், ஜூன் 2: திருப்பூர் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன.

திருப்பூர் மத்திய பேருந்து நிலையத்தில் 86 கடைகள் உள்ளன. இந்தக் கடைகள் மற்றும் சாலையோர கடைகள் என அதிக அளவில் ஆக்கிரமிப்புகள் செய்து பொதுமக்கள் செல்வதற்கு கடும் இடையூறு இருப்பதாக தொடர் புகார் எழுந்தது.

இதைத் தொடர்ந்து திருப்பூர் மாநகராட்சி அதிகாரிகள், காவல் துறையினர் உதவியுடன் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணியில் செவ்வாய்க்கிழமை ஈடுபட்டனர். நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக இடத்தை ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருந்த பொருள்கள், பழக்கடைகள், பர்னிச்சர்கள் உள்ளிட்டவற்றை மாநகராட்சி அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

ஏற்கெனவே பலமுறை எச்சரித்திருந்தும் ஆக்கிரமிப்புகளை அகற்றாததால் பொருள்களை பறிமுதல் செய்யும் நிலை ஏற்பட்டதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

பஞ்சாப் நேஷனல் வங்கி
பஞ்சாப் நேஷனல் வங்கி
the name you can BANK upon !

SAMB சென்னை, 4வது தளம், PNB டவர்ஸ், எண்.46-49, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை 14, தொலைபேசி: 044-28112261-90 மின்னஞ்சல்: ZS8341@pnb.bank.in

2002 ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் நிதியான உரிமை (அமலாக்க) விதிகள் 8(6) மற்றும் 9(1)ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான மின் ஏல விற்பனை குறித்து பொதுமக்களுக்கான அறிவிப்பு

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் **கடன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்)க்கு** குறிப்பாகவும் கடன் வழங்கிய பஞ்சாப் நேஷனல் வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரியானவர், **கீழே குறிப்பிட்ட பெயர்களில் உள்ள கடன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்)** ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வந்து சேரவேண்டிய கீழ் குறிப்பிட்டுள்ள கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு ஆக்கப்பூர்வ சுவாதினத்தில் எடுத்துக்கொண்டு, அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்து(க்களை), "உள்ளது உள்ளவாறு" "உள்ளது உள்ளபடி" எனும் அடிப்படையில் 23.06.2026 அன்று விற்கப்பட உள்ளன.

கடன்தாரர் / அடமானதாரர்/மேம்படுத்துபவர்:

1) **M/s. RBR Garments Private Limited,** எண்.177/3-A1, பச்சாங்காட்டுப்பாளையம், காரைபுதூர் கிராமம், அருள்புரம் அஞ்சல், திருப்பூர்.

2) **திரு. B. சண்முகசுந்தரம்,** 1/556, TPN கார்டன், K. செட்டிப்பாளையம், தாராபுரம் சாலை, திருப்பூர் – 641 604.

3) **திருமதி. S. வைஜ்ணவி மீனா,** 1/556, TPN கார்டன், K. செட்டிப்பாளையம், தாராபுரம் சாலை, திருப்பூர் – 641 604

அடமானத்தில் உள்ள சொத்தின் விவரங்கள்

பிணையச் சொத்தின் விவரங்கள்: M/s. RBR Garments Pvt Ltd இன் பெயரில் உள்ள சொத்து: திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார்பதிவு மாவட்டம், திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், காரைபுதூர் கிராம ஊராட்சி வரியத்தின் எல்லைகளுக்குட்பட்ட, அருள்புரம் அஞ்சல், காரைப்புதூர் கிராமம் சர்வே எண்.177/3A1, 178/3, 179/3B1C, 179/3B1B இல் அடங்கிய M. P. மில் தோட்டம், கதவு எண்.7/67A, 7/67A1, 7/67B, 7/67C ஆகியவைகளில் அமைந்துள்ள நிலம் & கட்டிடம் **வகை எண்.I:** G. சர்வே எண்.177/3A1 இன் நிலங்கள் பரப்பளவு 4.96ஏக்கர்கள் @ ரூ. 4.01 அதில் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.177/3A2 நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான, G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்கள், G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், G. சர்வே எண்.177/3B இன் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலம். **வகை எண்.II :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், G. சர்வே எண்.177/2A இன் கிழக்கு மேற்காக வாகனப் பாதை மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.178/3 இன் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 1.40ஏக்கர்கள் நிலம். **வகை எண்.III :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.178/3, இன் பரப்பளவு 0.04ஏக்கர்கள் முக்கோண வடிவங்கொண்ட நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3B1B இன் பரப்பளவு 1.44ஏக்கர்கள் நிலங்கள், G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் மற்றும் G. சர்வே எண்.179/3A & 179/2 இல் உள்ள கிழக்கு மேற்காக கால்வாய்க்கு கிழக்கில், G. சர்வே எண்.178 பகுதி இன் நிலங்களுக்கு தெற்கில். ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலம். **வகை எண்.IV :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.179/3B2 இன் கிழக்கு மேற்காக கால்வாய்க்கு வடக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G.சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G.சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலம். **வகை எண்.V :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.179/3B2 இன் கிழக்கு மேற்காக கால்வாய்க்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 2.06 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3B1C இன் பரப்பளவு 1.26½ ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலம். **வகை எண்.VI :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலங்களுக்கு மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலம். **வகை எண்.VII :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்:M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.15 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B பகுதியின் நிலத்திற்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலம். **வகை எண்.VIII :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண். 179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 4.29 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், G. சர்வே எண். 179/3A & 179/2 இன் கிழக்கு மேற்காக கால்வாய்க்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.178/3 இன் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலம். ஆவண எண்.744/2002, 758/2002, 1763/2002, 5474/2003 & 2197/2004 இல் குறிப்பிட்டபடி **வகை எண்.I முதல் வகை எண்.VIII** வரை உள்ள மொத்தப் பரப்பளவு 8.43 ஏக்கர்கள் நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள ரூப்பர் வடிவமைப்பு கொண்ட கட்டிடம், சன்னல்கள், கதவுகள் போன்ற பிற, கதவு எண்கள்.7/67A, 7/67A1, 7/67B & 7/67C, சொத்து வரி மதிப்பீட்டு எண்.2033, 7736, 2034 & 2035, அதன் E. B. இணைப்பு எண். 03-213-001-1972, 03-213-001-2100 & 03-213-001-1105 அனுடன் ஒயரிங்கள், வைட்ரிஃபைட் போன்ற பிற மற்றும் அதனுடன் வழக்கமான நடைவழி மற்றும் எளிய உரிமைகள் போன்ற பிற உட்பட மற்றும் சொத்திற்கு செல்லும் இதர வழக்கமான சாலைகள் மற்றும் வாகனப்பாதைகள் உபயோக உரிமைகள் உட்பட.

குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ.29,20,05,000/- பேணித் தொகை: ரூ. 2,92,00,500/-

வங்கிக்கு தெரிந்தவரை மேற்குறிப்பிட்ட சொத்துக்களுக்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை.

13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி: 25-03-2024	
13(4) SARFAESI சட்டம் 2002ன் படி கவாதீன அறிவிப்பு தேதி: 29-06-2024	
EMD செலுத்த கடைசி தேதி	22/06/2026 அன்று மாலை 5.00 வரை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிடுதல்	15.06.2026
மின் ஏல தேதி மற்றும் நேரம்	23.06.2026 நேரம்: காலை 11 முதல் மாலை 4 வரை
ஏல உயர்வு (ஏலத்தை உயர்த்திக் கோருவதற்கான குறைந்தபட்ச தொகை): ரூ.5,00,000.00	
தொடர்புக்கு: திரு. VNS சந்திரசேகர் அச்சல்லா, முதன்மை மேலாளர்/அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மொபைல்: 8328235168	
வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை	30-04-2026 அன்றுள்ளபடி ரூ.51,87,10,039.64 (ரூபாய் ஐம்பத்து ஒர் கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து பத்தாயிரத்து முப்பத்து ஒன்பது மற்றும் பைசா அறுபத்து நான்கு மட்டும்)

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையானது கடனீட்டுச் சொத்துக்கள் நிதியான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொருந்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (1). "எங்கு உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்ன உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்னவெல்லாம் உள்ளதோ உள்ள நிலையில்" என்ற அடிப்படையில் சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். (2). அட்டவணையில் மேற்குறிப்பிட்ட பிணைச் சொத்துகளின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த தகவலுக்குக் கூறப்பட்டுள்ளன, எனினும் இந்த பிரகடனத்தில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதல்கள் ஏதேனும் இருப்பின் ஆகியவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பதிலளிக்கமாட்டார். (3). விற்பனையானது கீழே கையொப்பிட்டவரால் **23.06.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை https://baanknet.com** என்ற இணையதளம் மூலமாக நடத்தப்படும். (4). விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com & www.pnbindia.in ஆகிய இணையதளங்களில் காணலாம்.

SARFAESI சட்டம் 2002 விதி 8 (6) & 9 (1) ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு.

தேதி : 02.06.2026
இடம் : சென்னை

முதன்மை மேலாளர் / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பஞ்சாப் நேஷனல் வங்கி, பிணையக் கடன் வழங்கிய வங்கி

பல்லடத்தில் அரசின் கனவு இல்ல திட்டத்தில் பணம் கிடைக்காததால் பொதுமக்கள் முற்றுகை

பல்லடம், ஜூன் 2: பல்லடம் ஒன்றியத்தில் அரசின் கனவு இல்ல திட்டத்தில் பணம் கிடைக்காததால் பல்லடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை பயனாளிகள் செவ்வாய்க்கிழமை முற்றுகையிட்டு மனு அளித்தனர்.

பல்லடம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் திமுக ஆட்சியில் அரசின் கனவு இல்லம் 2025 –2026 திட்டத்தில் சுமார் 85 வீடுகள் அனுமதிக்கப்பட்டு பயனாளிகளால் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் வீடு கட்டும் பயனாளிகளுக்கு இதுவரை பணம் கிடைக்கவில்லை என்று கூறி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை முற்றுகையிட்டு அதிகாரிகளிடம் மனு அளித்தனர்.

இதையடுத்து அவர்களிடம் பல்லடம் வட்டார வளர்ச்சி அலுவலர் சுரேஷ்குமார், ஒன்றிய ஆணையர் ரமேஷ் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, இது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததைத் தொடர்ந்து போராட்டத்தை கைவிட்டு பயனாளிகள் கலைந்து சென்றனர்.

இது குறித்து திட்டப் பயனாளிகள் கூறுகையில்:

இதுவரை 75 சதவீதம் வீட்டு வேலைகள் முடிவடைந்துள்ளன. அதன் பிறகும் பணம் கிடைக்கவில்லை.

இதுகுறித்து ஊராட்சி நிர்வாகத்திடம் கேட்டால் எங்களுக்கு உத்தரவு வரவில்லை என்கின்றனர். எனவே அதிகாரிகள் பணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

நிதி நிறுவனத்தில் ரூ.37.18 லட்சம் கையாடல் செய்த ஊழியர் கைது

பெண்ணுக்கு வலைவீச்சு

திருப்பூர், ஜூன் 2: திருப்பூர், பி.என். சாலையில் உள்ள தனியார் நிதி நிறுவனத்தில் ரூ.37.18 லட்சம் கையாடல் செய்த நிறுவன ஊழியரை போலீஸார் கைது செய்தனர். மேலும், ஒரு பெண்ணை போலீஸார் தேடி வருகின்றனர்.

திருப்பூர், அனுப்பர்பாளையத்தை தலைமையிடமாக கொண்டு தனியார் நிதி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிதி நிறுவனத்துக்கு பல்வேறு இடங்களில் கிளைகள் உள்ளன. இந்நிலையில், பி.என். சாலை போயம்பாளையம் பகுதியில் இந்த நிதி நிறுவனத்தின் ஒரு கிளை செயல்பட்டு வருகிறது.

அந்த கிளையின் வரவு செலவு கணக்குகளை நெருப்பெரிச்சலைச் சேர்ந்த செந்தில்குமார் மற்றும் கௌசல்யா ஆகியோர் பராமரித்து வந்தனர்.

இந்நிலையில் அந்த கிளையின் வரவு செலவு கணக்குகளில் சந்தேகமடைந்த நிறுவன மேலாளர் சுப்பையா வரவு செலவு கணக்குகளை பார்த்தார். அப்போது அந்த கிளையில் இருந்து ரூ.42.18 லட்சம் கையாடல் செய்தது தெரியவந்தது. இது குறித்து மேலாளர் சுப்பையா, வடக்கு குற்றப் பிரிவு போலீஸில் புகார் அளித்தார்.

புகாரின்பேரில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்த போது செந்தில்குமார் ரூ.5 லட்சம் பணத்தை கொடுத்துள்ளார். மீதமுள்ள ரூ.37.18 லட்சம் பணத்தை கொடுக்கவில்லை. தொடர்ந்து செந்தில்குமார், கௌசல்யா ஆகியோரின் கைப்பேசிகள் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது.

தொடர்ந்து போலீஸார் தனிப்படை அமைத்து தேடி வந்தனர். இந்நிலையில், திருப்பூர் வீரபாண்டியில் பதுங்கியிருந்த செந்தில்குமாரை (37) போலீஸார் கைது செய்தனர். மேலும், கௌசல்யாவை தேடி வருகின்றனர்.

இணையதளம் மூலம் இலவச யோகா பயிற்சி

பல்லடம், ஜூன் 2: உலக யோகா தினத்தை முன்னிட்டு 18 நாள்கள் இணையதளம் மூலம் இலவச யோக பயிற்சி அளிக்க உள்ளதாக ஹார்ட்ஃபுல்னெஸ் இன்ஸ்டிடியூட், திருப்பூர் கிளை தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் ஊடகப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் பொதிகை வெ.சுந்தரேசன் செவ்வாய்க்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

உலக யோகா தினத்தை முன்னிட்டு ஆன்மிகம் குறித்து விரிவாக அறிந்து கொள்ள வேண்டும் என்கிற விருப்பமுள்ள புதிய ஆர்வலர்கள், யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சிகளை எளிதாக கற்றுக்கொண்டு, தங்களது அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி பயனடைய வேண்டும் என்கிற நோக்கில் திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், உகாயனூர் ஊராட்சி பல்லவராயன்பாளையத்தில் அமைந்துள்ள ஹார்ட்ஃபுல்னெஸ் தியான மையம் (ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்) சார்பில் ஜூன் 3–ஆம் தேதி முதல் 21–ஆம் தேதி வரை மொத்தம் 18 நாள்கள் காலை 6 மணி முதல் 6.30 மணி வரை இணையதளம் மூலம் இலவச யோகா பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் 16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் அவரவர் வீட்டில் இருந்தபடி பங்கேற்கலாம். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு 9791266423 அல்லது 9698989897 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முற்றோதல்...

அவிநாசிலிங்கேஸ்வரர் கோயிலில் திருஞானசம்பந்தர் குரு பூஜையை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முற்றோதல்.

குடும்பத் தகராறில் மனைவியை கொலை செய்த கணவர் கைது

திருப்பூர், ஜூன் 2: வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்தவரை திட்டியதால் மனைவியின் கழுத்தை நெரித்துக் கொலை செய்த கணவரை போலீஸார் கைது செய்தனர்.

பிகார் மாநிலத்தைச் சேர்ந்த சதாம் (39), அப்செரி காதூன் (25) தம்பதிக்கு ஒரு பெண் மற்றும் 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். திருப்பூர் கோல்டன் நகர் பகுதியில் தங்கி பனியன் நிறுவனத்தில் கடந்த 6 மாதங்களாக பணியாற்றி வந்த நிலையில், கடந்த சில நாள்களாக சதாம் வேலைக்கு செல்லாமல் வீட்டிலேயே இருந்ததாக கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த அப்செரி காதூன், சதாமை தொடர்ந்து திட்டி வந்துள்ளார். இந்நிலையில், செவ்வாய்க்கிழமை காலை குழந்தைகள் வெளியே விளையாடிக் கொண்டிருந்தபோது, பணம் இல்லை எனக் கூறி சதாமை மனைவி திட்டியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த சதாம், அப்செரி காதூனை கழுத்தை நெரித்துக் கொலை செய்துவிட்டு மனைவி அருகிலேயே அமர்ந்திருந்தார்.

விளையாடச் சென்ற குழந்தைகள் வீட்டுக்கு வந்து பார்த்துபோது, தாய் இறந்து கிடப்பதைக் கண்டு கதறி அழுதுள்ளனர்.

இதைத் தொடர்ந்து அக்கம்பக்கத்தினர் வந்து பார்த்தபோது, அப்செரி காதூன் கொலை செய்யப்பட்டது தெரியவந்தது. இது குறித்து தகவல் அறிந்து வந்த திருப்பூர் வடக்கு போலீஸார், சதாமைக் கைது செய்து அப்செரி காதூன் சடலத்தைக் கைப்பற்றி வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மின்சாரம் பாய்ந்து பள்ளி மாணவர் உயிரிழப்பு

வடவள்ளி, ஜூன் 2: பேரூரில் மின்சாரம் பாய்ந்து பள்ளி மாணவர் உயிரிழந்தார்.

கோவை மாவட்டம், பேரூர் அண்ணா நகரைச் சேர்ந்தவர் காளீஸ்வரன்– அங்கம்மாள் தம்பதியின் மகன் விஷ்வா (13). இவர் அப்பகுதியில் உள்ள அரசுப் பள்ளியில் 8–ஆம் வகுப்பு படித்து முடித்து விட்டு, சுண்டக்காமுத்தூர் பகுதியில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் 9–ஆம் வகுப்பு சேர்வதற்கு தயாராகி வந்தார்.

விஷ்வா

இந்நிலையில் விஷ்வா தனது வீட்டில் உள்ள மீன்தொட்டியை சுத்தம் செய்ய செவ்வாய்க்கிழமை முடிவெடுத்தார்.

மீன்தொட்டியை சுத்தம் செய்வதற்கு முன்பாக அதன் சுவிட்ச்சை அணைக்க மறந்து விட்டதாகத் தெரிகிறது. இதையடுத்து சுத்தம் செய்வதற்காக மீன் தொட்டிக்குள் கையை விட்டபோது அவர் மீது மின்சாரம் பாய்ந்தது.

இதில் அவர் தூக்கி வீசப்பட்டு அலறியபடி கீழே விழுந்தார். அவரது சப்தம் கேட்டு பெற்றோர் மற்றும் அக்கம்பக்கத்தினர் ஓடி வந்து பார்த்தனர். ஆனால் விஷ்வா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்து அங்கு வந்த பேரூர் போலீஸார், விஷ்வாவின் உடலை மீட்டு கூறாய்வுக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இச்சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பலத்த காற்றுடன் மழை: ஏராளமான வாழைகள் சேதம்

சத்தியமங்கலம், ஜூன் 2: சத்தியமங்கலத்தை அடுத்த புன்செய்புளியம்பட்டியில் செவ்வாய்க்கிழமை பலத்த காற்றுடன் கனமழை பெய்ததால் ஏராளமான வாழை மரங்கள் சேதமடைந்தன.

சத்தியமங்கலத்தை அடுத்த புன்செய்புளியம்பட்டி,நொச்சிக்குட்டை, தண்ணீர்பந்தல் உள்ளிட்ட பகுதிகளில் கதலி, செவ்வாழை, நேந்திரம் ரக வாழைகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இந்நிலையில், புன்செய்புளியம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. இதனால், 25 ஆயிரம் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டிருந்த ஏராளமான வாழை மரங்கள் சேதமடைந்தன.

சேதமடைந்த வாழை மரங்கள்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், பலத்த காற்று, கனமழை காரணமாக அறுவடைக்குத் தயாராக இருந்த வாழைமரங்கள் முற்றிலும்சேதமடைந்துள்ளன. ரூ.30 லட்சம் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1 லட்சம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

கிணற்றில் தவறி விழுந்த குழந்தை உயிரிழப்பு

பெருந்துறை, ஜூன் 2: பெருந்துறை அருகே கிணற்றில் தவறி விழுந்த குழந்தை உயிரிழந்தது.

பெருந்துறையை அடுத்த காஞ்சிக்கோவில் அருகேயுள்ள பெருமாள்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் பொன்னுசாமி,விவசாயி. இவரது மனைவி மோனிஷா. இவர்களது மகன் வைபவ் கார்த்திக் (3).

மோனிஷா தனது மகனுடன் கவுண்டன்பாளையத்தில் உள்ள பெற்றோர் வீட்டுக்கு செவ்வாய்க்கிழமை வந்துள்ளார். பின்னர், அனைவரும் வீட்டுக்குள் அமர்ந்து பிற்பகல் உணவருந்திக் கொண்டிருந்தபோது, வைபவ் கார்த்திக் மட்டும் வீட்டின் வெளியே விளையாடிக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

இதையடுத்து, அவர்கள் வெளியே வந்து பார்த்தபோது குழந்தையைக் காணவில்லையாம். அப்பகுதியில் உள்ள அனைத்து இடங்களிலும் தேடிய நிலையில், வீட்டுக்கு எதிர்ப்புறம் உள்ள பொது கிணற்றில் பார்த்தபோது குழந்தை கிடந்தது தெரியவந்தது.

இதையடுத்து, அப்பகுதி மக்கள் உதவியுடன் குழந்தையை மீட்டு நசியனூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.